# பிரெஞ்சு குடியரசு அதிபருடன் பிரதமர் மோடி சந்திப்பு

செப்டம்பர் 10, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி, செப்டம்பர் 10, 2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டின் போது பிரெஞ்சு குடியரசு அதிபர் திரு இமானுவேல் மேக்ரனுடன் மதிய உணவின் போது இருதரப்பு சந்திப்பை நடத்தினார். இந்தியா-பிரான்ஸ் உத்தி சார்ந்த கூட்டாண்மையின் 25வது ஆண்டின் நிறைவை நினைவுகூரும் வகையில், 2023 ஜூலை 14 அன்று நடைபெற்ற பிரெஞ்சு தேசிய தினக் கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வதற்காக பிரதமர் பாரிஸ் சென்ற பிறகு, அந்நாட்டு அதிபர் திரு மேக்ரனின் இந்திய பயணமாக இது அமைந்துள்ளது.

இந்தியாவின் ஜி20 தலைமையின் வெற்றிக்கு அதிபர் மேக்ரன் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்தார். இது தொடர்பாக பிரான்ஸ் அளித்த ஆதரவுக்கு அதிபர் மேக்ரனுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இரு தலைவர்களும் இருதரப்பு உறவுகளைப் பற்றி விவாதித்தனர், குறிப்பாக ‘ஹொரைசன் 2047’ திட்டம், இந்தோ-பசிபிக் திட்டம் மற்றும் பிரதமரின் சமீபத்திய பயணத்தின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து விவாதித்தனர். பாதுகாப்பு, தொழில்துறை, புத்தொழில், விண்வெளி, அணுசக்தி, டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம், ஆற்றல், காலநிலை மாற்றம், கல்வி, அருங்காட்சியகம், மக்கள்-மக்கள் தொடர்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பதற்கான இலக்குகளை செயல்படுத்துவது குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

இந்தோ-பசிபிக் பிராந்தியம் உட்பட முக்கியமான சர்வதேச மற்றும் பிராந்திய முன்னேற்றங்கள் குறித்து இரு தலைவர்களும் கருத்துகளை பரிமாறிக்கொண்டனர் மற்றும் சீர்திருத்தப்பட்ட பன்முகத்தன்மையின் அவசியத்தை வலியுறுத்தினர். இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடத்தின் (ஐஎம்இசி) அறிவிப்பை அவர்கள் வரவேற்று, அதைச் செயல்படுத்த ஒன்றிணைந்து செயல்படுவதாக உறுதியளித்தனர்.

இந்தியாவின் வெற்றிகரமான சந்திரயான்-3 திட்டத்திற்கு அதிபர் மேக்ரன் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்தார். ஆறு தசாப்த கால இந்தியா-பிரான்ஸ் விண்வெளி ஒத்துழைப்பை இரு தலைவர்களும்

நினைவு கூர்ந்தனர்.

**புது தில்லி**
**செப்டம்பர் 10, 2023**